Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ் ISSN: 3049-0723 (Online)
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

**Volume 1, No. 07, April 2025**

# The Evolving Nature of Worship

**Dr J.JESI**

Assistant professor Tamil M.A.M School of Engineering Siruganur ,Trichy,

Jesiraja80@gmail.com 8675073957

**Abstract:**

Did the ancient Tamils have faith in deities? Did they worship them? Were the deities they worshipped and revered deities native to Tamil Nadu? These are natural questions that arise. To find answers to such questions, it is necessary to deeply explore Tamil literature. The Tamil people worshipped the gods they believed in according to their customs and traditions. It is true that worship began in connection with nature. This reflects the lifestyle of the people of that time and their close connection with nature. In the early stages, humans recognized the power and grandeur of nature and began to worship it. They worshiped natural elements such as the sun, wind, rain, and fire as deities. This was a sign of fear and respect for nature. Many references to such nature worship can be found in Sangam literature. For example, in "Mullaipattu," it is mentioned that the rain god was worshipped. The people of that time worshiped and praised nature for the prosperity of agriculture and their lives. In devotional literature like "Thirumurugaatrupadai," Lord Muruga is depicted as a part of nature itself. Mountains and forests are mentioned in connection with him. Furthermore, ancient Tamils worshiped those who died valiantly by erecting memorial stones (Nadukal). This was a way of honoring heroism and sacrifice. These memorial stones were erected in memory of the deceased heroes, and offerings were made to them. This worship emphasized the importance of valor in society. Thus, the ancient Tamils' worship centered on nature and heroism. It was intertwined with their lives and culture. Over time, these forms of worship gradually evolved, leading to the emergence of various deities.

**Keywords:** Worship , Mullaipattu , Thirumurugaatrupadai, Evolving Worship

# இறைவழிபாட்டில் வளர்ச்சி நிலை

**முனைவர் ஜெ. ஜெஸி**

உதவிப் பேராசிரியர் எம். ஏ. எம் ஸ்கூல் ஆப் இன்ஜினியரிங் சிறுகனூர் , திருச்சி .

**சுருக்கம்**:

பண்டையத் தமிழர்களிடம் தெய்வ நம்பிக்கை இருந்ததா? அவர்கள் தெய்வங்களை வணங்கினார்களா? அவர்கள் வணங்கி வழிபட்ட தெய்வங்கள் தமிழ்நாட்டுத் தெய்வங்கள் தானா? என்ற கேள்விகள் இயல்பாக எழுகின்றன. இத்தகைய கேள்விகளுக்கு விடை காண தமிழ் இலக்கியங்களை ஆழமாக ஆராய்வது அவசியமாகிறது. தமிழ் மக்கள் தங்கள் பழக்கவழக்கங்களை ஒட்டியே தாங்கள் நம்பிய கடவுளர்களை வழிபட்டு வந்தனர். இயற்கை வழியிலேயே கடவுள் வழிபாடு ஆரம்பத்தில் நடைபெற்றது என்பது உண்மை. இது, அக்கால மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்கள் இயற்கையோடு கொண்டிருந்த நெருங்கிய தொடர்பையும் பிரதிபலிக்கிறது. தொடக்க காலத்தில், மனிதன்

இயற்கையின் சக்தியையும், அதன் பிரம்மாண்டத்தையும் உணர்ந்து அதை வணங்கத் தொடங்கினான். கதிரவன், காற்று, மழை, நெருப்பு போன்ற இயற்கை கூறுகளைத் தெய்வங்களாகக் கருதி வழிபட்டனர். இது, இயற்கையின் மீதான பயம் மற்றும் மரியாதையின் அடையாளமாக இருந்தது. சங்க இலக்கியங்களில் இது போன்ற இயற்கை வழிபாடு குறித்த பல குறிப்புகள் காணப்படுகின்றன. உதாரணமாக, "முல்லைப்பாட்டு"-இல், மழை கடவுளை வழிபட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அக்கால மக்கள், விவசாயம் செழிக்கவும், தங்கள் வாழ்வு வளம்பெறவும் இயற்கையைத் துதித்து வழிபட்டனர். "திருமுருகாற்றுப்படை" போன்ற பக்தி இலக்கியங்களில் முருகக் கடவுள் இயற்கையின் ஒரு பகுதியாகவே சித்தரிக்கப்படுகிறார். மலைகளும், காடுகளும் அவரோடு இணைந்தே கூறப்படுகின்றன. மேலும், பண்டைய தமிழர்கள் வீர மரணம் அடைந்தவர்களை நடுகல் நாட்டி வழிபட்டனர். இது, வீரத்தையும் தியாகத்தையும் போற்றும் விதமாக அமைந்தது. இந்த நடுகற்கள், இறந்த வீரர்களின் நினைவாக நடப்பட்டு, அவர்களுக்குப் படையல் செய்து வழிபட்டனர். இந்த வழிபாடு, சமூகத்தில் வீரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. இவ்வாறு, பண்டைய தமிழர்களின் இறைவழிபாடு இயற்கை மற்றும் வீரத்தை மையமாகக் கொண்டிருந்தது. இது அவர்களின் வாழ்க்கையோடும், பண்பாட்டோடும் பின்னிப்பிணைந்திருந்தது. காலப்போக்கில், இந்த வழிபாட்டு முறைகள் படிப்படியாக வளர்ச்சி பெற்று, பல்வேறு தெய்வங்கள் உருவாக வழிவகுத்தது.

**முன்னுரை**

பண்டையத் தமிழர்களிடம் தெய்வ நம்பிக்கை இருந்ததா? அவர்கள் தெய்வங்களை வணங்கினார்களா? அவர்கள் வணங்கி வழிபட்ட தெய்வங்கள் தமிழ்நாட்டு தெய்வங்கள் தானா? என்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன. இக்கேள்விகளுக்கான பதில்களைத் தேடி நாம் வெகுதூரம் அலைய வேண்டியதில்லை. தமிழ் இலக்கியங்களை நுணுகி ஆராய்ந்தாலே போதுமானது, தெளிவான விடைகள் கிடைக்கும்.

தொன்றுதொட்டு வாழ்ந்த தமிழ் மக்கள், தங்கள் வாழ்க்கை முறையையும், பழக்கவழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டே தாங்கள் நம்பிய கடவுளர்களை வழிபட்டு வந்தனர். இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்த அவர்கள், இயற்கை சக்திகளையே தெய்வமாக வழிபட்டனர் என்பது மறுக்க முடியாத உண்மை. சூரியன், சந்திரன், மழை, காற்று, நெருப்பு போன்ற இயற்கை கூறுகளையே அவர்கள் தெய்வங்களாகக் கருதி வழிபட்டனர். படிப்படியாக, இந்த இயற்கை வழிபாடானது, உருவ வழிபாடு மற்றும் பல கடவுள் கொள்கைகளுக்கு வழிவகுத்தது எனலாம். சங்க இலக்கியங்களில் இது தொடர்பான பல குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த வழிபாட்டு முறைகள் காலப்போக்கில் எப்படி மாற்றம் அடைந்தன, எந்தெந்த தெய்வங்கள் முக்கியத்துவம் பெற்றன என்பதை விரிவாக ஆராய்வது சுவாரஸ்யமாக இருக்கும்.

**இறை நம்பிக்கை**

தெய்வ நம்பிக்கை என்பது மனித மனங்களில் ஆழமாக வேரூன்றிய ஒரு எண்ணம். இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், பயம் ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அறியாத சக்தியைப் பற்றிய பயம், இயற்கையின் சீற்றங்களைப் பற்றிய பயம், எதிர்காலத்தைப் பற்றிய பயம் போன்ற பலவிதமான பயங்கள் மனிதனை இறை நம்பிக்கையை நோக்கித் தள்ளுகின்றன.

இந்த பயம் சில நேரங்களில் மூடநம்பிக்கையாகவும் மாற வாய்ப்புள்ளது. இருப்பினும், நம்மை விட உயர்ந்த, எல்லையற்ற ஆற்றல் கொண்ட ஒரு சக்தி இருக்கிறது என்ற எண்ணம் மனிதனுக்கு ஆறுதல் அளிக்கிறது. அந்த ஆற்றலால் ஆக்கவும், அழிக்கவும், காக்கவும் முடியும் என்ற நம்பிக்கை மனித மனதில் ஒருவிதப் பாதுகாப்பை உருவாக்குகிறது.

இப்படிப்பட்ட ஒரு சக்தி இருக்கிறது என்ற எண்ணம் தோன்றிய பிறகுதான் மனிதன் நன்மை தீமைகளை பகுத்தறியத் தொடங்கினான். எது நல்லது, எது கெட்டது என்று சிந்தித்து செயல்பட ஆரம்பித்தான். அன்பும் அறிவும் பெருக, கூட்டுக் குடும்பமாக வாழத் தொடங்கினான். ஒருவருக்கொருவர் உதவி செய்து, பகிர்ந்துண்டு வாழும் வாழ்க்கை முறை உருவானது.

கல்வி அறிவு இல்லாத காலத்தில், மக்கள் தெய்வத்துக்குப் பயந்து வாழ்ந்தனர். இயற்கை சீற்றங்களான மின்னல், இடி, மழை, புயல் போன்றவற்றை கண்டு அஞ்சினர். அவற்றைத் தெய்வத்தின் வெளிப்பாடாகக் கருதி வழிபட்டனர். தனித்தனி குடும்பங்களாக வாழத் தொடங்கியபோது, இயற்கை நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட அச்சத்தினால் தெய்வ நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

தமிழில் எப்போது இலக்கியம் தோன்றியதோ, அப்போதே தமிழர்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். சங்க இலக்கியங்கள் பல தெய்வங்களைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளன. இதன் மூலம், தமிழர்கள் பல தெய்வங்களை வணங்கியவர்கள் என்ற உண்மை புலப்படுகிறது. ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒவ்வொரு குணம் உண்டு என்றும், அவற்றை வழிபடுவதன் மூலம் குறிப்பிட்ட பலன்களைப் பெறலாம் என்றும் அவர்கள் நம்பினர். இந்த நம்பிக்கை இன்றும் பல இடங்களில் தொடர்கிறது.

**தொல்காப்பியத்தில் இறைவழிபாடு:-**

நமக்கு கிடைத்துள்ள பழமையான நூல் தொல்காப்பியத்தின் வழி தமிழர்களிடம் பல தெய்வ வழிபாடு இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணண் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

தொல்காப்பியர் கூறும் நான்கு நிலத்து மக்களும் தனித்தனி தெய்வங்களை வணங்கி வந்துள்ளனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நால்வகை நிலங்களும் மழையின்றி வறட்சி காணப்படும்பொழுது பாலைநிலம் தோன்றும். இதனால் ஐவகை நிலம் ஆகும். ஆக ஐந்து வகையான தெய்வங்களை வணங்கியுள்ளனர்.

முல்லை நிலத்தினர் திருமாலையும், குறிஞ்சி நிலத்தினர் முருகனையும், மருத நிலத்தினர் இந்திரனையும், நெய்தல் நிலத்தினர் வருணனையும் பாலை நிலத்தினர் கொற்றவை தெய்வத்தினையும் வழிபட்டுள்ளனர்.

**இயற்கை வழிபாடு:-**

**கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் மன்னிய மூன்றும்**
**கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே**
**( தொல், புறத்திணை-85)**

எனும் நூற்பாவில் கதிரவன், சந்திரன் நெருப்பு என்னும் இயற்கைப் பொருட்களையும் வணங்கினர் என்பது புறத்திணை இயலின் மூலம் இவ்வுண்மைத் தெளிவாகும். கொடிநிலை-கதிவரன் , கந்தழி – நெருப்பு, வள்ளி-சந்திரன், இவைகளைத் தவிர கூற்றுவன், பேய், பிசாசு முதலியவற்றையும் தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் தெய்வங்களாக வணங்கி வந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

**பலியிட்டு வணங்குதல்:-**

நம் முன்னோர் புலால் உணவையும் மதுவையும் விரும்பி உண்டு வந்துள்ளனர். மது அருந்துவதற்கும், புலால் உண்பதற்கும் கண்டிப்போ தடையோ இல்லை. சிறந்த புலவர்கள், வள்ளல்கள் குறிப்பாக ஔவையார் போன்ற புலவர்கள் அதிகமாக விரும்பி உண்டு மகிழ்ந்தனர். மக்கள் தங்கள் உணவு வழக்கத்தின்படியே கடவுளுக்கும் புலால் படைத்து, பூசை செய்து வணங்கியுள்ளனர்.

“**வாடாப் பூவின் இமையா நாட்டத்து**
**நாற்ற உணவினோடும் (புறம் 62)”**

**“வாடாபூவின் இமையா நாட்டத்து**
**நாற்ற உணவின் உருகெழு பெரியோர் “**
**(மதுரைக்காஞ்சி 457-458)**

தாங்கள் வணங்கிய தெய்வங்களுக்கு இரத்த பலியிட்டு, சமைத்த புலால் உணவையும் படைத்து வணங்கி வாழ்த்தினர். ஆடு கோழிகளைப் பலியிட்டு, மது மாமிசங்களைப் படைத்து வழிபாடு செய்து வந்துள்ளனர். தங்களின் பழக்கவழக்கங்களை ஒட்டியே கடவுளரை வணங்கியுள்ளனர். வழிபாடுகளில் பலியிடப்படும் உயிரின் ஊன்களைத் தேவர்கள் உண்ணும் உணவென நம்பினர். இதனை அவிப்பலி என்பர்.

**மழை வேண்டுதல்:-**

மலையிலே மேகங்கள் சூழ்ந்து மழை பெய்க வென்று பலியிட்டு வணங்கினால் மிகுந்த மழை பெய்யும். அந்த மழை நிற்க வேண்டுமெனவும் மேகங்கள் மேலே போய்விட வேண்டும் என்று தெய்வத்தை வேண்டுவர். அவ்வாறு வேண்டுவதால் மழை பெய்யாமல் நின்றுவிடும் என்பதை

**மலைவான் கொள்கென உயிர்ப்பலி தூஉய்**
**மாரி ஆன்று மழைமேக்கு உயர்க எனக்**
**கடவுள் பேணிய குறவா மக்கள்**
**பெயல்கண் மாறிய உவகையர்**

**(புறம் 143)**

மழையில்லாவிட்டால் தெய்வத்தை வேண்டி விழா எடுப்பர். மழை மிகுதியாகப் பெய்தாலும் அது நிற்கும்படி தெய்வத்தை வேண்டிக் கொள்வர். இவ்வழக்கம் தமிழர்களிடம் இருந்துள்ளது.

இந்திர விழாக் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தின் உள்ள காவல்பூதத்தைப் பெண்கள் பூசையிட்டு வணங்கியுள்ளனர். தமது நாட்டிலிருந்து பசி நோய் பகைகள் ஒழிய வேண்டும், மழையும், செல்வமும் பெருக வேண்டும் என வேண்டிக் கொண்டதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. பண்டைய தமிழகத்தில் இந்திரவிழா நடந்தது என்பதையும், மழைக்காகத் தெய்வங்களை வேண்டிக் கொள்ளுதலையும் காணமுடிகின்றது. இன்றும் தமிழகத்தில் மழைக்காக வேண்டுதல் செய்யும் வழிபாடு ஒழியவில்லை.

**இறந்தோரை வழிபாடுதல்:-**

தமிழரிடையே வழிவழி வழக்கமாக இறந்தோரை வழிபடும் பழக்கம் இருந்துள்ளது. பகைவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாக்கும் பொருட்டு போரிலே மாண்ட வீரர்களுக்கு கல்நட்டு வைத்து வணங்கும் வழக்கத்தினை

"**காட்சி கால்கோல் நீர்ப்படை நடுதல்**
**சீர்த்தகு மரபின் பெரும் படை வாழ்தல்"**

(தொல்-புறம்-5)

என தொல்காப்பிய புறத்தினையியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கற்கள் நிறைந்த பகுதியிலிருந்து குறிப்பிட்ட நல்லதொரு கல்லினைக் கண்டு, தெரிவு செய்து, அக்கல்லைக் கொண்டு வந்து, வழிபாட்டுக்குரிய வடிவம் கொடுக்க வேண்டும். கல்லினை நீர்விட்டு தூய்மை செய்து போர் வீரனது பெயரும் பெருமையும் பொறித்து, அவர் இறந்த இடத்திலோ அல்லது புதைத்த இடத்திலோ நட்டு, மயில் தோகையும் மாலையும் அணிவித்து ஊன்ற வேண்டும். கோயிலில் செய்யும் (கும்பாபிஷேகம்) குடமுழுக்கு போன்று சிறப்புகளைச் செய்து கடவுளாக மதித்து வணங்கி வாழ்த்துதல் நடைபெற்றுள்ளது. இறந்துபோன போர்வீரமறவனை தெய்வமாக்கப்படும் வரலாற்றுச் செய்திகளையும், வழிபாட்டுமுறைகளையும் தொல்காப்பியத்தில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

வீரர்களுக்கு கல்நட்டு வணங்கும் வழக்கமே தமிழ்நாட்டில் பல தெய்வங்கள் நிலைப்பதற்கு காரணமாகும்.

**கடவுள் வழிபாடு நிலைகள்:-**

மக்கள் எந்தச் செயலைத் தொடங்கினாலும் முதலில் கடவுள் வணக்கம் செய்தப் பின்னரே செயலைத் தொடங்குவர். திருமண நிகழ்ச்சிகளுக்கு முன்பு கடவுள் வழிபாடு (அகம் 136.6, குறிஞ்சிபாட்டு 5.7) பாணர்கள் தாங்கள் இசையைப் பாடத் தொடங்கும் முன் முதன்முதலில் கடவுள் வாழ்த்தை இசைத்தபின் பாடத் தொடங்கினர். நாள் தோறும் கடவுளைப் பாடுதலை கடமையாகக் கொண்டிருந்தனர்(பெரும்பாணாற்றுப்படை 48-52) அரசவையில் கூட அரசரை வாழ்த்தும் முன் கடவுளை வழிபட்டுப்பின் மன்னனரைப் புகழ்ந்தனர் (மலைபடுகடாம் 538-544). மாலை நேரங்களில் மகளிர் தங்கள் வீடுகளில் விளக்கு ஏற்றி நெல், மலர் முதலியன தூவி வழிபட்டனர். (மதுரைக்காஞ்சி 555-558) என்பன போன்ற



TAMILMANAM

செய்திகளை இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகின்றது. இறைவழிபாடு என்பது மக்களின் வாழ்க்கையோடு இணைந்து காணப்படும் செயலாகும். பிரித்தறிய இயலாதது.

**நாகரிகமான வழிபாடு:-**

பண்டைய காலங்களில் தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிட்டு வணங்கும் முறை மிகுதியதாக இருந்துள்ளது, தெய்வங்களுககு உயிர்ப்பலியிடுவது தவறு என்ற கொள்கை சைன, பௌத்த மதங்களின் செல்வாக்குப் பரவியப் பிறகுதான் உயிர்ப்பலியிடும் வழக்கம் குறைந்துள்ளது.'

திருமால், முருகன் போன்ற தெய்வங்களை மலர் கொண்டு பூசை செய்யும் வழக்கம் ஏற்பட்டது. காய்கனிகள், தானியங்களால் செய்த பண்டங்களைப் படைக்கும் வழக்கம் ஏற்ப்பட்டது. நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தில் இவ்வழக்கம் தமிழகத்தில் மிகுதியாகப் பரவியது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட உயிர்ப்பலி தடைச் சட்டத்தால்தான் தெய்வங்களுக்கு உயிர்ப்பலி இடுவது ஓரளவு குறைந்துள்ளது.

மேற்கூறிய கருத்துக்களின் அப்படையில் தெய்வத்தை வழிபடும் முறையில் நாகரிகம் பெற்ற நிலை இல்லை என்பதே உறுதி. நாயன்மார்கள் ஆழ்வார்கள் காலத்தில் தான் தமிழ்மக்கள் கடவுள் வணக்கம் வழிபாட்டு முறையில் நாகரிகம் பெற்றுள்ளனர் என்பது தெளிவான உண்மை. இந்த வளர்ச்சிக்கு காரணம் சமண மதமும், புத்தமதமும் தான். வட நாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்த மதங்கள் வழிபாட்டில் நாகரிக நிலையைக் கற்றுக் கொடுத்துள்ளன என்பது தெளிந்த நீரோடை. கற்றறிந்த அறிஞர்களும் உயர்ந்த கொள்கைகளை ஏற்றுக்கொண்டனர்.

பிற மதத்தினரின் படையெடுப்பின் ஆட்சியினாலும் பிழைப்புத் தேடி வந்தவர்களாலும், அயல் நாட்டினரின் வருகையாலும், பல்வேறு மதங்களும், வழிபாட்டு முறைகளும் புகுத்தப்பட்டுள்ளன. இம்மதங்களால் தமிழக மக்கள் பல்வேறு வளர்ச்சி நிலையை கண்டுள்ளனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

**இறைவழிபாட்டில் இன்றைய வளர்ச்சிநிலை:-**

உலகில் உள்ள எல்லா பொருட்களும் கடவுள் வடிவமே. எல்லா பொருட்களிலும் உருவமாகவும், அருவமாகவும் இருக்கின்றான். தனியொரு உருவத்தில் இறைவனை அடக்க முயற்சிப்பது அர்த்தமில்லை என்ற கருத்துக்களை சிவவாக்கியார் பாடல்களில் காணலாம்.

அன்பே கடவுள், அறிவே கடவுள், இன்பமே கடவுள், மக்கள் உள்ளத்தில் தான் கடவுள் இருக்கிறான். அன்பும் அறிவும் உள்ள மனம்தான் கடவுள் வாழும் இடம் என்ற கருத்து தாயுமானவர் பாடல்களில் காணமுடிகின்றது.

இருபதாம் நூற்றாண்டில்

**ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி**
**அலையும் அறிவிலிகான்-பல**
**ஆயிரம் வேதம் அறிவு ஒன்றே தெய்வம் உண்டு**

**ஆம் எனில் கௌரே!** என்று

அறிவே தெய்வம் என்று பாரதி குறிப்பிடுகின்றார்

மேலும்,

**செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்**
**சேர்ந்திடலாம் என்றே எண்ணிருப்பவன்**
**பித்தமனிதர் அவர் சொல்லும் சாத்திரம்**
**பேய் உறையாம் என்று இங்கு ஊதேடா சங்கு**

சிவலோகமும், வைகுந்தமும் இவ்வுலகில் தான் இருக்கின்றன. புராணங்களிலும் சாத்திரங்களிலும் சொல்லப்படும் வேறொரு மேலோகம் என்பதில்லை. மகிழ்ச்சியாய் வாழ்பவருக்கு இப்பூமி சொர்க்கம். துன்பம் துயரங்களிலும் நோய்களிலும் அழுத்தி, இருப்போருக்கு நரகம். அனைத்தும் இவ்வுலகில் நிகழ்வன. செத்த பிறகு இன்னொரு உலகில் வாழ்வோம் என்பது பைத்தியக்காரர்களின் பொய்மொழிகள் ஆகும்.

மக்களிடம் மூடத்தனத்திலே முளைத்திருந்த தெய்வ நம்பிக்கை. ஒவ்வொரு காலக்கட்டங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தி இன்று வளர்ச்சியடைந்து, சீர்த்திருத்தமடைந்து வளர்ந்திருப்பதைக் காணமுடிகின்றது. ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சியடைவதை மக்கள் விரும்புகின்றனர். காலத்திற்கேற்ப வழிபாட்டு முறையில் ஏற்படும் மாற்றங்களை மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

தற்போது **ஏழைகளுக்கு, இயலாதோருக்கு, ஊனமுற்றோருக்கு, முதியோர்களுக்கு, தாய் தந்தையரை இழந்த குழந்தைகளுக்கு உதவி செய்து அவர்கள் முகத்தில் சிரிப்பைக் காண்பதே இறைவனைக் காண்பதாக உணர்ந்த மக்களாக வாழ்வதில் பெருமகிழ்ச்சியே.**

**மேற்கோள்கள்**

- **"**முல்லைப்பாட்டு." பத்துப்பாட்டு.
- "திருமுருகாற்றுப்படை." பத்துப்பாட்டு.

.

**License**

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.